55

am-4.

QT
N17
172844

[பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்]

இஃது

# யாஸீன் சூறத்தின் தர்ஜுமா.

---

அஷ்ஷைகுகாமில் அல்ஆரிபு பில்லாஹி ஹஜறத்து
ஹாஜி மொன்னு முஹம்மது காதிரி ஷுத்தாரீ
யவர்கள் குமாரரும்,

சென்னை "முஸ்லிம் கல்வி விருத்திச் சங்கத்" தலைவர்
களிலொருவரும்,

"லிவாவுல் இஸ்லாம்" பத்திராதிபருமாகிய
ஹஜறத்து மவ்லவி ஹாஜி
ஷைகுமீருன் முஹ்யித்தீன் ஸாஹிபு
அவர்களால் தற்ஜுமாச் செய்யப்பட்டு

தமது

இஸ்லாமிய்யாப் புஸ்தகசாலை
முஹம்மதிய்யாப் பிரசில்
பதிப்பிக்கப்பட்டது.

---

சென்னை 1917 ஜுலைமீ

இதன் விலை, ... ... ... அணா 5.

All Registered Copy-right.

OFFICE ... 26 SEP ... MADRAS

# அவுராதுல் குர்ஆன்.

இதில் குர்ஆன் ஆயத்துகளிலுள்ள துஆக்களைப் பொறுக்கியெடுத்து 7-நாளைக்கும் ஏழுபாகமா பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆயத்துகளை ஓதத்தெரியாதவர்கள் அதன் மஃனாவை ஓதினால் அந்த ஆயத்தை ஓதினதவாபு கிடைக்குமென்றும், ஆயத்தை ஓதத் தெரிந்தவர்கள் அந்த மஃனாவை தெரிந்து ஓதினால் அதற்கும் மேலான தவாபுகிடைக்குமென்றும் இருப்பதால் ஷை துஆ ஆயத்துகளின் மஃனாக்களை வெகு அருமையாகவும், அலங்காரமாகவும் சிறந்த தமிழ் நன்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. தவிரவும், ஆதிகாலந்தொடுத்து நாளது வரையும் பெரிய இமாம்களும், அவுலியாக்களும், சாலிஹீன்களும் ஷை ஆயத்துகளை ஓதினவுடன் மேற்சொன்ன ஏழுநாளைக்கும் ஏழுவிதமான துஆக்களை ஓதிக்கொண்டு வருகிறார்கள். அந்த துஆக்களையும், அதன் மஃனாக்களையும் அந்தந்தப் பிரிவின் கீழ் அச்சிடப்பட்டு மிருக்கிறது. இப்புத்தகம் அறபி ஓதத் தெரியாத ஜனங்களுக்காகவே அப்பெரும் முயர்சி யெடுத்து தமிழில் தர்ஜிமாச் செய்து அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை 0 8 0 அறபு தமிழ் 1 0 0


இஸ்லாமிய்யாப் புஸ்தகசாலை,

நெ-48, மூர்தெருவு, முத்தியாலுபேட்டை,

மதராஸ்.




பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 SEP 1917
MADRAS

இஃது

# யாஸீன் ஸூரத்தின் தர்ஜுமா.

---

அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தா னிர்றஜீம்

இதன் மஅனா.

எடுத்தெறியப்பட்ட ஷைதானுடைய தீங்குகளைவிட்டும் நான் அல்லாஹுத்த ஆலாவைக்கொண்டு காவல் தேடுகிறேன்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இதன் மஅனா.

உலகத்தின் கண் எல்லோருக்கும் பொதுவாகக் கிருபை செய் செய்கிறவனும், ஆகிறத்தின்கண் முஃமின்களுக்கு சொந்தமாய்க் கிருபை செய்கிறவனுமாகிய அல்லாஹுத் தஆலாவுடைய திருநாமத்தைக்கொண்டு இதை யாரம்பிக்கிறேன்.

## அல்ஹம்து ஸூரத்தின் ஆயத்துகள் 7.

இதன் மஅனாகள்.

(1) எல்லாப் புகழும், ஆலத்தார்களைப் பரிபாலிப்பவனாகிய அல்லாஹுத்த ஆலாவுக்கே யுரியது. (2) உலகத்தின்கண் எல்

லோருக்கும் பொதுவாக கிருபைசெய்கிறவன். ஆகிறத்தின்கண் முஃமினு னவர்களுக்குச் சொந்தமாகக் கிருபைசெய்கிறவன். (3) கூலிகொடுக்கிற நாளில் (அதாவது கியாமநாளில்) இராஜ ஞனவன். (4) ஆண்டவனே! நாங்களுன்னையே வணங்குகிறோம். இன்னும் நாங்களுன்னிடமே நல்லுதவி தேடுகிறோம். (5) நீ யெங்களை நேரான பாதையில் நிலைப்படுத்திவை. (6) அதாவது, சிலருடைய பாதை. எப்படிக்கொத்த சிலரென்றால் அவர்க ளின்பேரில் நீ நிஅமத்தாக்கி வைத்தாயே அப்போற்கொத்த அன் பியாக்கள், அவ்லியாக்கள், ஸாலிஹீன்களிவர்களுடைய பாதை யில் நிலைப்படுத்துவாயாக. அவர்களின் பேரில் கோபமாக்கப் பட்டதே யப்படிக்கொத்த யஹூதி யூதர்களின் பாதையிலும், இன்னும் வழிகெட்டவர்களாகிய நஸாருக்களுடைய பாதையிலு மாக்காதே (ஆமீன்) எங்களாண்டவனே! எங்கள் துஆவைக் கபூலாக்கி வைத்தருள்வாயாக.

---

## யாஸீன் சூரத்தின் ஆயத்துகள் 83.

### இதன் மஃனுகள்.

மிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

(1) "யாஸீன்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.) இதன் கருத்தை அல்லாஹுத் தஆலாதானறிவான். ஆனால் இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறபடி யாஸீனுக்கு மஅனுவாகிறது. "யாஇன்ஸான்" அதாவது யாமு ஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்ல மென்பதாயிருக்கும்.

நபியே (2-3-4) பூராயமான இந்த குறுஆனின் பேரில் சத்திய மாகக் மெய்யாகவே நீராகிறவர் நேர்வழியின் பேரிலுள்ள றசூல் மார்களில் நின்றுமாயிருக்கும். (5-6) இந்தக்குற்ஆனுகிறது அவர்க ளுடைய பிதாக்களுக்கு அச்சம் பூட்டப்படவில்லையே அப்படிக் கொத்த சில கவ்முகளுக்கு அச்சம் பூட்டுவதற்காக வேண்டி சிறப்பும் கிருபையுமுடைய அல்லாஹுத்தஆலா இறக்கிவைத்த தாயிருக்கும். அந்தக் கவ்முக ளாகிறவர்கள் அவர்கள் நேர் வழியை விட்டும், அல்லாஹுத் தஆலாவை யொருமைப் படுத் துகிறதை விட்டும் மறந்தவர்களா யிருக்கும். (7) அவர்களில் மிகு

தமான பேர்களின் பேரில் அதானைக்கொண்டு சொல் திட்டமா யிட்டது. ஆனதால் அவர்களில் மிகுந்த பேர்கள் உம்மைக் கொண்டு ஈமான் கொள்ளமாட்டார்கள். (8) மெய்யாகவே நாம் அவர்களுடைய கழுத்துகளில் அரிகண்டங்களை யாக்கி யிருக்கி றோம். அந்த அரிகண்டங்களாகிறது அவர்களுடைய அலகு வரையிலு மிருக்கிறது. ஆனதினாலே அவர்கள் தலையை யுயர்த் தினவர்களா யிருப்பார்கள். (அதாவது ஈமானுக்கு வழிப்பட்டுத் தலை சாய்க்கமாட்டார்கள்.)

(9) இன்னும் நாம் அவர்களுக்கு முன்னில் நின்றும் ஒரு அடைப்பையும், அவர்களுக்குப் பின்னில் நின்றும் ஒரு அடைப் பையும் ஆக்கியிருக்கிறோம். இன்னுமவர்களுக்கு முக மூடிபோட் டிருக்கிறோம். ஆனதா லவர்கள் ஈமானுடைய வழியைப் பார்க் கமாட்டார்கள். (10) அவர்களுக்கு நீரச்சம் பூட்டினாலும் சரி, அச் சம் பூட்டவில்லை யானாலுஞ் சரி அவர்கள் ஈமான் கொள்ளமாட் டார்கள். (11) உம்முடைய அச்சம் பூட்டுதல் பிரயோஜனங் கொ டுக்கிறதெல்லாம் இந்தக் குறு ஆனைத்துடர்ந்து, இன்னும் அல் லாஹுத்த ஆலாவைக்காணுமலிருக்கிற ஹாலில் அவனைப்பயந் தானே அவனுக்குத்தான் பிரயோஜனங் கொடுக்கும். ஆன தால் நீரவனுக்கு பிழை பொறுக்குதல் கொண்டும், சங்கையான கூலியைக் கொண்டும் நன்மாராயஞ் சொல்வீராக (12) மெய் யாக நாமாகிறது நாமே மவ்த்தானவர்களை ஹயாத்தாக்குவோம். இன்னும் அவர்கள் ஜீவித்திருந்த காலத்தில் நன்மை, தீமையில் நின்றும் முற்படுத்தி வைத்தார்களே அதையும், இன்னும் அவர் கள் செய்துவைத்த நன்மை, தீமையிலிருந்து பின்னுலுண்டாச் சுதே அதையும் எழுதுவோம். இன்னும் சகல வஸ்துக்களையும் பஹிரங்கமாகிய கித்தாபு (அதாவது லவ்ஹுல்மஹ்பூலில்) மட்டுப் படுத்தியிருக்கிறோம்.

நபியே நீர் மக்காமா நகரிலுள்ள காபிர்களுக்கு (13) உக மையாக முறுசலான நபிமார்கள் அந்தாக்கியா வென்னும் பட்ட ணத்தையுடையவர்களுக்கு வந்தபோ துள்ளதை உவமை சொல் லிக் காண்பிவிய்யும் (14) அந்த அந்தாக்கியாக்காரர்க ளளவில் நாமிரண்டு பேரை (அதாவது ஈஸாநபியையும், யஹ்யா நபி யையும்) அனுப்பிவைத்த நேரத்தில், அஜ்ஜனங்கள் அவ்விரு வர்களையும் பொய்யாக்கி வைத்தார்கள். பின்பு நாம் மூன்றுவ

தைக்கொண்டு (அதாவது ஈஸா நபியுடைய கலீபா ஷம்ஊன் என்பவரைக்கொண்டு) கெட்டிபடுத்திஞேம். பின்பு அந்த மூவர்களும் மெய்யாகவே நாங்கள் உங்களளவி லனுப்பப்பட்ட தூதர்களாயிருக்குமென்று சொன்ஞர்கள். (15) அப்படிச்சொன்னதற்கு அஜ்ஜனங்கள் நீங்கள் எங்கள்போலொத்த் மனிதர்களே யொழியவேறில்லை யென்றும், இன்னும் ஒருவஸ்தையும் றஹ்மான் இறக்கிவைக்க வில்லை யென்றும், நீங்களாகிறவர்கள் பொய் சொல்கிறவர்களே யொழிய வேறில்லையென்றுஞ்சொன்ஞர்கள். (16) அதுகேட்டு அவர்கள் எங்களாண்டவன் அறிவான். மெய்யாகவே நாங்கள் உங்கள்ளவி லனுப்பப்பட்ட தூதர்களாயிருக்கும். (17) இன்னும் பஹிரங்கமாகிய எத்திவைக்குதலே யொழிய எங்கள் பேரிலில்லை யென்று சொன்ஞர்கள்.

(18) அதற்கந்த ஜனங்கள் மெய்யாகவே நாங்கள் உங்களைக் கொண்டு துற்குறி கொள்கிறேம். நீங்களெங்களை விட்டு விலகிக்கொள்ள வில்லையாஞல், திட்டமாக நாங்கள் உங்களைக் கல்லெறிவோம். இன்னும் எங்களில் நின்றும் நொம்பலஞ் செய்யும் வேதனையுங்களைத் தொடுமென்று சொன்ஞர்கள். (19) அப்பொழுது மேற்படி மூவர்களும் உங்களுடைய துற்குறியுங்களுடனுயிருக்கும். உஙகளுக் குபதேசித்துப் பயமுறுத்தினதற்காக வேண்டியா? நீங்களிப்படித் துர்க்குறி பிடித்து மாறு செய்கிறீகள். என்கிலும் நீங்களாகிறவர்கள் வரம்பை மீறி நடக்கிற கவ்முகளா யிருக்குமென்று சொன்ஞர்கள்.

அப்பொழுது (20) அந்த அந்தாக்கியாப் பட்டணத்தின் கடைசியில் நின்றும் ஒருமனிதர் (அதாவது. மேற்படி மூவர்களையும் கொண்டு ஈமான் கொண்டிருந்த ஹபீபு நஜ்ஜாற்) மிக விரைவாகவந்து அச்சனங்களை நோக்கிச் ஓ என்னுடைய கவ்முகளே! நீங்கள் றசூல்மார்களைத் தொடர்ந்துக் கொள்ளுங்கள். (21) உங்களிடத்தில மார்க்கத்தைப் போதிப்பதற்காகக் கூலி வாங்கமாட்டார்களே அவர்களைத் தொடர்ந்துக்கொள்ளுங்கள். இன்னுமவர்களே, நேர்வழி பெற்றவர்களாயிருக்குமென்று சொன்ஞர். அதற்கந்த ஜனங்கள் நீ ரவர்கள் மார்க்கத்திலிருக்கிறீரோவென்று கேட்டார்கள். அதற்கவர் (22) என்னைப்படைத்த ஆண்டவனை நான் வணங்கிறதை விட்டும், என்னை ~லக்கிற வஸ்தில்லை. இன்னும் அவனளவில் தான் உங்களை

மீள்விக்கப்படும். (23) அவனைத்தவிர வேறு நாயகன்களை (அதா
வது நீங்கள் வணங்கிற விக்கிரகங்களை) நான் நாயனாக்கிக்
கொள்வேனா? அப்படி நானாக்கிக் கொள்ளமாட்டேன். றஹ்
மானாகிய நாயன் தங்கடத்தைக் கொண்டு என்னை நாடினானே
யானால் நீங்கள் வணங்குகிற நாயன்மார்களுடைய மன்றாட்டம்
என்னைவிட்டும் ஒரு வஸ்தையுந் தேவையறுத்துவைக்கவு மாட்
டாது. இன்னும் அந்த நாயமார்களென்னைக் காப்பாற்றிவைக்க
வுமாட்டார்கள். (24) மெய்யாகவே நானாகிறவன் அல்லாஹூத்
தஆலா வல்லாததை வணங்கினேனேயானால் பஹிரங்கமான வழி
கேட்டிலேயாயிருப்பேன் (25) இன்னும் மெய்யாகவே நானா
கிறவன் உங்களைப்படைத்துப் பரிபாலிக்கிற நாயனைக்கொண்டு
ஈமான் கொண்டேன். ஆனதினாலே நீங்கள் என்னுடைய சொல்
லைக் கேளுங்களென்று சொன்னார்.

அப்போது அந்த ஜனங்கள் கல்லாலெறிந்து அவரைச் சக்
கறாத்து ஹாலிலாக்கிவிட்டார்கள். அவர் மவ்த்தாகிற நேரத்
தில் அல்லாஹூத் தஆலாபுறத்தில் நின்றும். (26) நீர் சுவர்க்க
லோகத்தில் புகுதுமென்று அவருக்குச் சொல்லப்பட்டது.
அப்பொழுது அவர் என்னுடைய ஆண்டவன் எனக்குப் பிழை
பொறுத்து, என்னைச் சங்கைவான்களில் நின்று மாக்கினானே
யதை யென்னுடைய கவ்முகளறிய வேண்டியதாயிருந்ததே
யென்று சொன்னார். (27) நாம் அந்த ஹபீபுந்நஜ்ஜாற் மவ்த்தா
னதின்பின் அந்தக் கவ்முகளின் பேரில் வானத்தில் நின்றும் பட்
டாளங்களை (அதாவது மலக்குகளை) யிறக்கிவைக்கவு மில்லை.
இன்னும் நாம் இறக்கிவைக்கிறவனாக ஆயிருக்கவுமில்லை. (28)
ஓரேயொரு அபயச்சப்தத்தைத் தவிர (அதாவது அந்தக் கவ்மு
களின்பேரில் ஜிபுரியீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் ஒரு சப்தமிட்
டார்கள்.) அப்பொழுதவர்கள் மூச்சொடுங்கி மையத்தாய் போ
னார்கள். (29) அவர்களுக்கு றசூல்மார்களில் நின்றும் ஒருவரும்
வருகிறதில்லை. அவர்களந்த றசூலைக்கொண்டு பரிகாசஞ் செய்தே
யொழிய அப்படிப்பட்ட அடியார்களின் பேரிலுள்ள ஓ! கை
சேதமே.

அந்த மக்கத்துக் காபிறுகளுக்கு அல்லாஹூத்தாலா சொல்
கிறான். (30) அவர்களுக்கு முந்திய காலத்திலுள்ள உம்மத்து
மார்களில் நின்று எவ்வளவோ பேர்களை ஹலாக் காக்கினோ

மென்கிறதையும் இன்னும் மெய்யாக அந்த ஹலாக்கானவர்கள் அவர்களளவில் மீண்டு வரமாட்டார்க ளென்பதையு மவர்கள் பார்க்கவில்லையா? (31) கல்குகளடங்கலும் நம்மிடம் சேகரமாக்கப்படுகிறவர்களாகவும், ஹாலிருக்கப்படுகிறவர்களாகவு மிருக்கும். (32) செற்றபூமி (அதாவது புற்பூண்டு முதலிய யாதென்றுமில்லாத பூமி) யாகிறது அவர்களுக்குத் திஷ்டாந்தரமாயிருக்கும். அந்தப் பூமியை நாம் தண்ணீரைக்கொண்டு ஹயாத்தாக்கி வைத்தோம். இன்னுமதில் நின்றும் வித்துகளை வெளிப்படுத்தி வைத்தோம். அதில் நின்றுமவர்கள் புசிக்கிறார்கள். இன்னும் நாமந்தப் பூமியில் ஈத்தமரங்கள், முந்திரிகைச் செடிகள் இவைகளில் நின்றும் தோட்டங்களை யுண்டாக்கினோம். (33) இன்னும் அதிலே யருவிகளை யொலித்தோடும்படி செய்தோம். (34) அவர்களுடைய கைகள் பழத்தை யுண்டாக்காமலிருக்கிற ஹாலில் அந்தப்பழங்களை யவர்கள் தின்னுவதற்காக வேண்டி யவ்விதமுண்டு பண்ணினோம். அவர்களிதற்கு ஷுக்கூறு செய்யமாட்டார்களோ? (35) பூமி முளைப்பிக்குமே அதினின்றும், இன்னும் அவர்களின் நபுசுகளினின்றும், இன்னும் அவர்கள் அறியமாட்டார்களே அதினின்றும், அவைகளின் வகை அடங்கலையும் படைத்தானே அந்த ஒரு நாயனை துய்தாக்குங்கள்.

(36) இன்னும் அவர்களுக்குஇரவானது ஒருஅடையாளமாயிருக்கும். அதினின்றும் பகலை நாம் பிரித்துவைக்கிறோம். அப்பொழுது அவர்கள் இருளில் புகுந்து போகிறார்கள் (37) இன்னும் சூரியனானது அவர்களுக்கு ஒரு அத்தாட்சியா யிருக்கும். அது தரிபடுந்தானம் வரையிலும் நடக்கும். அப்படி நடக்கிறதாகிறது சகலதையுமறிந்த சிறப்புடைய நாயனுடைய கற்பனையாயிருக்கும். (38) இன்னும் சந்திரனானது பழய ஈத்தங்குளாஞ்சி போல் அது மீளுகிறவரையிலும் சிலஸ்தானங்களையதற்கு நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். (39) சந்திரனையெத்திக்கொள்வது சூரினுக்குத்தேவையாகாது. இன்னும் இரவானது பகலுக்கு முந்திக்கொள்ளாது. (அதாவதுபகல்தீருமுன் இரவுண்டாகாது) சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலிய தடங்கலும் வானத்தில் நடக்கிறது. (40) இன்னுமவர்களுக்கு நாம் மெய்யாகவே அவர்களுடைய பிதாக்களை நிறைப்பப்பட்ட கப்பலில் ஏற்றிவைத்தோமே அதும் ஒரு திஷ்டாந்தரமாயிருக்கும். (41) இன்னும் அவர்கள்

ஏறுவார்களே அதை அந்தக்கப்பல் போற்கொத்ததில் நின்றும்
நாமவர்களுக்குப் படைத்தோம். (42-43) இன்னும், நாம்நாடுவோ
மேயானால் அவர்களை தண்ணீரில் தாழ்த்திபோடுவோம். அவர்
களுக்குக் காப்பாற்றுகிறவனுங் கிடையாது. இன்னுமவர்களை நம்
மில் நின்றுமுள்ள றஹ்மத்தும், குறித்தகாலம் வரையிலுமுள்ள
சுகண்டியுமேயொழிய அவர்களை யீடேற்றமாக்கப்படாது.

(44) இன்னுமவர்களுக்கு உங்களுக்கு முன்னிலுள்ளதை
யும், பின்னிலுள்ளதையும் பயந்துக் கொள்ளுங்களென்றும், உங்க
ளுக்குக்கிருபை செய்யப்படப் போதுமென்றுஞ் சொல்லப்பட்ட
தேயானால் அதை அவர்கள் புறக்கணித்துவிடுவார்கள். (45) அவர்
களுடைய நாயனுடைய திஷ்டாந்தரங்களில் நின்றும் ஒரு திஷ்
டாந்தரம் அவர்களிடத்தில் வரவில்லை அதைவிட்டுமவர்கள் புறக்
கணித்தவர்களாயிருந்தே யொழிய. (46) இன்னுமவர்களுக்கு அல்
லாஹுத் தஆலா வுங்களுக்குக் கொடுத்ததில் நின்றும் அல்லாவு
டைய பாதையில் செலவு செய்யுங்க ளென்று சொல்லப்பட்ட
தேயானால் மூமினானவர்களை நோக்கி அந்தக் காபிரானவர்கள்
ஒருவனுக்கு, எந்த வொருவனுக்கென்றால் அல்லாஹுத்த ஆலா
நாடினால் அவனுக்கு அவன் ஒஜீபனங் கொடுப்பானென்று
எண்ணி யிருக்கிறீர்களே அந்த வொருவனுக்கு நாங்களா
ஒஜீபனங்கொடுக்க வேணுமென்றும் நீங்கள் பஹிரங்கமான வழி
கேட்டிலேயே யொழிய இல்லை யென்றும் சொல்வார்கள். (47)
இன்னுமவர்கள் நீங்கள் உண்மை சொல்கிறவர்களா யிருந்தீர்க
ளேயானால் மவத்துக்குப்பின் எழுப்பப் படுமென்று நீங்கள்
சொல்லும் இந்த வார்த்தைப்பாடு எப்போதுண்டாகு மென்று
கேட்பார்கள்.

அதற்கு அல்லாஹுத் தஆலா சொல்லுகிறான் (48) அவர்
கள் ஒரே யொருசப்தத்தை யொழிய வழிபார்த்திருக்கவில்லை.
அவர்கள் ஒருவர்க்கொருவர் வழக்குப்பேசுகிறவர்களா யிருக்கிற
ஹாலில், அவர்களை அந்தச் சப்தம் பிடிக்கும். (49) அப்பொழுத
வர்கள் ஒரு சொல்லைக் கொண்டாவது வஸிய்யத்துச் செய்துக்
கொள்ளச் சக்திபெற மாட்டார்கள். இன்னும் அவர்களின் கிளை
கோத்திரத் தளவில் மீளவு மாட்டார்கள். அப்படி யப்படியே
மவ்தாய் விடுவார்கள். (50) பின்பு இரண்டாவது சூறா தப்படும்
அப்பொழுது அவர்கள் கபுறுகளி லிருந்து தங்களுடைய நா

யனளவில் தீபரமாய்ப் பிறப்படுவோர்கள். (51) அப்பொழுது அந்தக் காபிறுகள் ஓ எங்களுடைய கைசேதமே! எங்களுடைய நித்திரை செய்யும் தானத்தைவிட்டும் யாரெழுப்பினது என்று கேட்பார்கள் (அதாவது அந்தச் சப்தத்தைக் கேட்டிறந்ததற்கும், இப்போதிரண்டாவது சூறாதி யெழும்பினதற்கு மத்தியிலுள்ள நாற்பது வருடமும் யாதொரு வேதனை யில்லாமல் தூங்கிறவர்களா யிருந்தார்கள் ஆனதினாற்றால் நித்திரையிலிருந் தெழுப்பினதியாரென்று கேட்பார்கள்) அப்பொழுது இதுதான் றஹ்மான் வார்த்தைப்பாடு செய்ததும், இன்னும் றசூல்மார்கள் உண்மை சொன்னதுமாயிருக்கு மென்று சொல்லுவார்கள்.

(52) அந்த இரண்டாவது ஊதப்பட்ட சூறானது இசுறாயீலுடைய ஓரேயொரு சப்தமே யொழிய அது ஆயிருக்கவில்லை. அப்பொழுது அவர்கள் நம்மிடத்தில் கேள்வி கணக்குக்கேட்டுக் கூலிகொடுப்பதற்காக வேண்டிச்சேகரிக்கப் பட்டவர்களாகவும். ஹாலிருக்கப் பட்டவர்களாகவு மிருப்பார்கள். (53) இன்றைய தினத்தில் யாதொரு நபுசையும் அறவே அணுவளவும் அநியாயஞ் செய்யப்பட மாட்டாது. இன்னும் நீங்கள் அமல் செய்தீர்களே அந்த வொன்றே யொழிய உங்களுக்கு கூலி கொடுக்கப்பட மாட்டாது. (54) மெய்யாகவே இன்றையில் சுவர்க்கத்தையுடையவர்கள் தங்களுடைய பராக்கில் சுகத்தை அனுபவித்தவர்களாக இருப்பார்கள். (55) அந்தச் சுவர்க்கவாதிகளும், இன்னும் அவர்களுடைய ஸ்திரிகளும், நிழலில் தரிபட்டவர்களாகவும், கட்டில்களிற் சாய்ந்தவர்களாகவு மிருப்பார்கள். (56) சுவர்க்கத்தி லவர்களுக்குக் கனிவர்க்கங்களும். இன்னும் அவர்கள் வேண்டு மென்று மேலெண்ணம் வைப்பார்களே அவைகளுமுண்டா யிருக்கிறது. (57) சொல்லைக் கொண்டுள்ள சலாமத்தாகிறது கிருபை செய்கிற நாயனில் நின்றுமாயிருக்கும். (அதாவது ஆண்டவன் சுவர்க்கத்தில் முஃமினானவர்களுக்கு சலாமுன் அலைக்கு மென்று சொல்வதாயிருக்கும்.)

(58) ஓ பாவஞ்செய்த காபிறுகளே! இன்றையில் நீங்கள் முஃமின்களை விட்டும் பிரிந்து போங்களென்று அல்லாஹுத்தஆலா சொல்லுவான். (59) ஓ ஆதமுடைய மக்களே! நானுங்களிடம் நீங்கள் ஷெய்தானை வணங்க வேண்டாமென்றும், மெய்யாகவே ஷெய்தானாகிறவன் உங்களுக்குப்பகிரங்கமான பகையாளி

யாயிருக்குமென்றும், (60) இன்னும்நீங்களென்னை வணங்கவேணு மென்றும், வார்த்தைப்பாடு வாங்கவில்லையா? இதானது செவ் வையான நேர்வழியாயிருக்கும், (61) இன்னும் திட்டமாக ஷெய் தான் உங்களில் நின்றும் அனேகர்களை வழி கெடுத்துப் போட் டான். அப்படி வழிகெடுப்பதை நீங்கள் யோசித்துப்பார்த்து ஈமான் கொள்ளவேண்டாமா? (62) இதாகிறது துன்யாவில் நீங் கள் நபிமார்களால் அச்சம் யூட்டப்பட்டவர்களாக ஆயிருந்தீர் களே, அப்படிப்பட்ட நரகமாயிருக்கும். (63) நீங்களாகிறவர்கள் காபிருக இருந்தீர்களே அந்த வொன்றைக்கொண்டு இன்றையில் நீங்களிந்த நரகத்திற் சேருங்கள்.

(64) இன்றையில் அந்தக் காபிறுகளுடைய வாய்களின்பே ரில் நாம் முத்திரை வைப்போம். இன்னுமவர்களுடைய கைகள் அவர்கள் செய்த பாவங்களைக்குறித்து நம்முடனே சொல்லும். இன்னும் அவர்கள் எதைச் செய்தார்களோ அதைக்கொண்டு அவர்களுடைய கால்கள் சாட்சி சொல்லும். (65) நாம் நாடு வோமேயானால் அவர்களுடைய கண்களை யழித்து மழுக்கிவிடு வோம். பின்பு அவர்கள் பாதையை முன்னேக்குவார்கள். அப் பொழுதவர்கள் கண்ணில்லாம லெப்படிப்பார்ப்பார்கள்? பார்க்க மாட்டார்கள். (66) இன்னும் நாம் நாடினல் அவர்களை அவர்க ளுடைய தானங்களின் பேரில் வேஷமாற்றி வைப்போம். அவர் கள் ஒருவிடமும் போகவும், வரவும் சக்திபெற மாட்டார்கள். (67) யாராவ தொருவனுக்கு நாம் அவனுடைய ஆயிசை நீள மாக்கி வைத்தோமானல், அவனைப் படைகோலத்தில் மாற்றி வைப்போம். அந்தக் காபிறுகளிதை யோசித்து ஈமான்கொள்ள மாட்டார்களோ?

நபியவர்களைக் குறித்து, அல்லாஹுத் தஆலா (68) நாமவ ருக்குப் புலமையைப் படித்துக்கொடுக்கவுமில்லை. இன்னுமவருக் கது தேவையுமில்லை. அவர் கொண்டு வந்திருக்கிறது உபதேச மும், பஹிரங்கமான குறுஆனுமேயொழியவேறில்லை. (69) ஹயா த்தாகிவிட்டானே யந்த வொருவனுக்கு (அதாவது புத்திகூர்மை யுள்ளவனுக்கு.) அது அச்சம் யூட்டுவதற்காக வேண்டியும், இன்னும் காபிறுகள் பேரில் அதாபைக்கொண்டு சொல்லுதிட்ட மாகுமே யதற்காக வேண்டியும் இந்தக் குறுஆனை யிறக்கப்பட் டிருக்கிறது. (70) யாதொரு கூட்டம், உதவியு மில்லாத நம்மு

டைய கையைக்கொண்டு ஆடு, மாடு, ஒட்டகங்களை மெய்யாகவே நாமவர்களுக்குப் படைத்திருக்கிறதை யந்தக் காபிறுகளறியவில் லையா? அந்த வுயிர்ப்பினங்களுக்கு அவர்கள் சொந்தக்காரரா யிருக்கிறார்கள். (71) இன்னும் அவர்களுக்கு அவைகளை நாம் வசப்படுத்திக்கொடுத்தோம். இன்னுமவைகளில் சிலது அவர்க ளுக்கு வாகனமாயிருக்கிறது. இன்னு மவைகளில் நின்றும் சில தை யவர்கள் புசிக்கிறார்கள். (72) இன்னும் அவர்களுக்கு அவைகளில் இலாபங்களும், பிரயோஜனங்களும், குடிப்புகளு முண்டா யிருக்கிறது. இப்படியெல்லாம் நிஅமத்துக் கொடுத்தி ருக்கிற நாயனுக்கு அவர்கள் ஷுக்றுச்செய்ய மாட்டார்களோ?

(73) அவர்களுக்கு உதவிசெய்கிறதற்காக வேண்டி அல்லா ஹுத்தஆலா வல்லாததில்நின்றும் வேறொருநாயன்மார்களையாக் கிக்கொண்டார்கள். (74) அவர்களாக்கிக்கொண்ட நாயன்மார் கள். (அதாவது விக்கிரகமாகிய சுவாமிகள்) அவர்களுக் குதவி செய்ய சக்திபெற மாட்டார்கள். அந்த சுவாமிமார்கள் அவர்க ளுடனே நரகத்திற் சேகரமாக்கப்படுகிற கூட்டங்களாயிருக்கும் (75) நபியே யுமக்கு அந்தக் காபிறுகளுடைய சொல்லானது வியாகுலத்தைக் கொடுக்கவேண்டாம். மெய்யாகவே நாமாகிறது அவர்கள் இரகசியமாய்ப் பேசிக் கொள்கிறதையும், பரசிய மாய்ப் பேசிக்கொள்கிறதையும் அறிவோம்.

(76) மெய்யாகவேநாமவனை நுத்பாவில்நின்றும் படைத்திருக் கிறதை மனிதனறியவில்லையா? அப்படிப்படைத்திருக்க அவன் நமக்குப் பஹிரங்கமான வழக்காளியாயிருக்கிறான். (77) அவனை நாம் படைத்ததை மறந்தவனாயிருக்கிற ஹாலில் நமக்கவன் உவ மைசொலலுகிறான். அதாகிறது எலும்புகள் உக்கியிறந்துபோ னதாயிருக்கிற ஹாலில் அதை ஹயாத்தாக்கிறவன் யார் என்று கேட்கிறான். (78) நபியே நீ அதற்கு ஒரு வஸ்தாகவு மிராத போது முதல் தடவையாக அதையுண்டாக்கினனே யவன்தான் அதை மறுபடியும் ஹயாத் தாக்குவானென்று சொல்லுவீராக. (79) இன்னு மவனாகிறவன் படைப்புகளடங்கலையும் மிகவறிந்த வன். (80) இன்னுமவன் எப்போற்கொத்தவனென்றால் உங்களுக் குப் பச்சை மரத்தில் நின்றும் நெருப்பாக்கியிருக்கிறான். அதில் நின்றும் நீங்கள் நெருப்பை கடைந்துக்கொள்கிறீர்கள்.

(81) வானங்களையும், இன்னும் பூமியையும் இவ்வளவுபெரிதாயிருக்கிறதுடன் அவைகளைப் படைத்தானே யப்படிக்கொத்தவன். அவர்களைப்போற்கொத்த சிறிய மனிதர்களைப் படைக்கிறதின்பேரில் குதறத்துள்ளவனல்லவா? ஆம்-குதறத்துள்ளவன் தான். அவனாகிறவன் கல்குகளை மிகவும்படைக்கிறவன். சகல வஸ்துக்களையும் மிகவறிந்தவன். (82) அவன் ஒரு வஸ்தைப்படைக்கநாடினால் அவனுடைய கருமமாகிறதெல்லாம் "குன்" நீ ஆகென்று சொல்வான். உடனே அதாகிவிடும். (83) சகல வஸ்துடைய இராஜாங்கமும் அவன் வசத்திலிருக்கிறதே அப்படிக்கொத்த ஆண்டவனை நீங்கள் துய்தாக்குங்கள். இன்னும் அவனளவில் தான் உங்களை மீள்விக்கப்படும். அவன் தான் உங்களுக்கு கூலி கொடுப்பான்.

## குறுஆனிலுள்ள கடைசி சூறத்துகள் 7.

### 1-வது சூறத்து கவ்தறின் ஆயத்துகள் 3.

இதன் மஃனாக்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபியே (1) மெய்யாகவே நாமுமக்கு ஹவ்லுல் கவ்தறைக் கொடுத்தோம் (2) ஆனதால் உம்முடைய நாயனை ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையைத் தொழுது, ஒலுஹிய்யா வையறும். (3) மெய்யாகவே உம்மைக் கோபித்தவன் வம்மிசமற்றவன் அம்லது நலமற்றவன்.

### 2-வது சூறத்துக் காபிறூனின் ஆயத்துகள். 6.

இதன் மஃனாக்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபியே (1-2) நீர் சொல்லும் ஓ காபிறூனவர்களே! நீங்கள் வணங்குகிற விக்கிரகங்களை நான் இப்பொழுது வணங்கமாட்டேன். (3) இன்னும் நீங்களும் நான் வணங்கிற அல்லாஹுத்

தஆலாவை இப்பொழுது வணங்கமாட்டீர்கள். (4-5) நானுமினி மேல் எப்பொழுதும் நீங்கள் வணங்குகிற விக்கிரகங்களை வணங் கிறவனல்ல. நீங்களும் இனிமேல் நான் வணங்குகிற அல்லா ஹுத்த ஆலாவை எப்பொழுதும் வணங்கிறவர்களுமில்லை. (6) உங்களுடைய மார்க்கமானது உங்களுக்குண்டாயிருக்கிறது. இன்னும் என்னுடைய மார்க்க மெனக்குண்டாயிருக்கிறதென்று சொல்லுவீராக.

---

## 3-வது சூறத்து நஸறின் ஆயத்துகள். 3.

### இதன் மஃனுக்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபியே(1-2-3) அல்லாஹுத்தஆலாவுடைய உதவியும், இன்னும் மக்கமாநகரம் பிடிபடுதலென்னும், வெற்றியும்வந்து, இன்னும் நீர் அல்லாஹுத் தஆலாவுடைய மார்க்கத்தில் ஜனங்கள் கூட்டங்கூட்டமாகப் புகுதுகிறதைக் கண்டீரேயானுல், உம்முடைய நாயனின் புகழை அணைந்தவராக அவனை நீர் துய்தாக்கும். இன்னுமவனிடம் பிழை பொறுக்கத் தேடும். மெய்யாகவே அவனுகிறவன் தவ்பாவை மிகக்கபூல் செய்கிறவன்.

---

## 4-வது சூறத்துல் லஹ்பின் ஆயத்துகள் 5.

### இதன் மஃனுக்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

(1) அபீலஹபுடைய இரண்டு கையுஞ் சூகையாகி, இன்னு மவனும் அழிந்துபோகக்கடவது. (2) அவனுடைய முதல்களும், இன்னு மவனுடைய பிள்ளை குட்டிகளும் அவனை விட்டு அதாபைத் தேவையற்று வைக்கமாட்டாது. (3) இனி கொழுந்து விட்டெரியும் நெருப்பில் அபீலஹபு புகுதுவான். (4-5) இன்னு மவனுடைய பெண்ஜாதியும் விறகு சுமக்கிறவளாக முறுக்கப்பட்டதில் நின்று முள்ள கயறு அவளுடைய கழுத்திலுண்டாயிருக்கிற ஹாலில் அந்தநெருப்பிற் புகுதுவாள்.

---

## 5-வது சூறத்து இகுலாசின் ஆயத்துகள் 5.

இதன் மஃனுக்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

(1) நபியே கருமமாகிறது அல்லாஹுத் தஆலா வொருவனுயிருக்குமென்று சொல்லுவீராக. (2) அல்லாஹுத் தஆலாவாகிறவன் எப்போதும் யாவர்களும் சகல ஹாஜத்துகளிலும் நாடப்பட்டவனு யிருக்கும். (3) அவன் ஒருவரைப் பெறவுமில்லை. (4) அவனை யொருவர் பெறப்படவுமில்லை. (5) இன்னுமவனுக்கு ஒருவரும் நிகராயிருக்கவில்லை.

---

## 6-வது சூறத்துப் பலகின் ஆயத்துகள் 5.

இதன் மஃனுக்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

(1-முதல் 5-வரை ஆயத்து) நபியே நீர் அவன் படைத்த வஸ்தடங்கலுடைய தீங்கைவிட்டும், இன்னும் இரவு இருளானபோது இரவுடைய தீங்கைவிட்டும், இன்னும் முடிச்சுகளில் மந்திரித்து ஊதும் வஞ்சனைக்காரருடைய தீங்கை விட்டும், இன்னும் ஹஸ்துவைத்தபோது ஹஸ்துக்காரனுடைய தீங்கைவிட்டும், பலகுடைய நாயனைக்கொண்டு நான் காவல் தேடுகிறேனென்று சொல்லுவீராக.

---

## 7-வது சூறத்துன்னுசின் ஆயத்துகள். 6.

இதன் மஃனுக்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

(1-முதல் 6-வரை ஆயத்து) நபியே நீர் ஜின்களில் நின்றும், இன்னும் மனிதர்களில் நின்றும் உள்ள கன்னுசாகிய ஷெய்தான் மனிதர்கள் அல்லாஹுத் தஆலா வுடைய திக்றை விட்டும் நீங்கினபோது கெட்ட ஊசாட்டத்தைக் கொடுப்பானேயப்படிக் கொத்த தீங்கைவிட்டும் மனிதர்களுக்கு இராஜனும், நாயனும், றப்புமாகிய அல்லாஹுத் தஆலாவைக் கொண்டு நான் காவல் தேடுகிறேன் என்று சொல்வீராக.

## குறுஆனின் துவர்க்கத்திலுள்ள ஆயத்துகள் 5.

### இதன் மஃனுக்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

(1) "அலிபு-லாம்-மீம்" இதன் கருத்தை அல்லாஹுத்த ஆலாதா னறிவான் ஆயினும் சிலர்கள் அலிபானது அல்லாஹ் என்னும் இஸ்மிலுள்ள அலிபென்றும், லாமானது லதீபென்னும் இஸ்மிலுள்ள லாமென்றும், மீமானது மஜீதென்னும் இஸ்மிலுள்ள மீமென்றும் சொல்லுகிறார்கள். இதற்கு மஃனுவாகிறது தலைமைத்தனமாகிய கிருபைசெய்கிற அல்லாவாயிருக்கும். அல்லது, நான் கிருபையுடைய இராஜனான அல்லாவா யிருக்கும் என்பதாகும். இது போலவே ஒவ்வொரு அறிவாளர்களும் ஒவ்வொரு மஃனுக்களைச் சொல்கிறார்கள். (2) இந்த வலுப்பமான குறுஆனாகிறது அல்லாவில் நின்று மிறங்கினதென்பதற்கு யாதொரு சந்தேகமுங் கிடையாது. அதானது முத்தகீன்களுக்கு நேர்வழி காட்டுகிறதுமாயிருக்கும் (3) அவர்கள் எப்போற்கொத்த முத்தகீன்க ளென்றால் மறைந்த கருமத்தைக் கொண்டு ஈமான் கொள்வார்கள். இன்னும் தொழுகையைநிலைபாடாகத் தொழுது வருவார்கள். இன்னும் அவர்களுக்கு நாம் கொடுத்தோமே யந்த வொன்றில் நின்றும் அல்லாவுடைய பாதையில் செலவு செய்வார்கள். (4) இன்னு மவர்கள் எப்போற்கொத்தவர்களென்றால் உம்மள்வில் இறக்கப்பட்ட இந்த குறுஆனைக்கொண்டும், உமக்கு முன்னாலே யிறக்கப்பட்ட வேதங்களைக்கொண்டும், ஈமான் கொள்வார்கள். இன்னுமவர்கள் ஒடுக்கத்து நாளைக்கொண்டு எகீன்கொள்வார்கள். (5) அவர்களாகிறவர்கள் அவர்களுடைய நாயனில் நின்றுமுள்ள நேர்வழியின் பேரிலிருக்கிறார்கள். இன்னு மவர்களாகிறவர்கள் அவர்களே செயம் பெற்றவர்களா யிருக்கும்.

---

### ஆயத்துல் குரிசிய்யின் மஅனு.

அல்லாஹுத்த ஆலாவாகிறவன் ஹக்கென்னும் உண்மைகொண்டு வணங்கப்பட்ட நாயன் யாருமில்லை அவனைத் தவிர. அவன் என்றென்றும் நிலைபாடும், ஹயாத்துமுள்ளவன். அவ

னுக்கு நித்திரையும், அயர்ந்த தூக்கமுமுண்டாகாது. வானங்களிலும், இன்னும் பூமியிலு முள்ளவை யாவற்று மவனுக்கே யுரியது. அவனுடைய வுத்தரவுகொண்டே யொழிய அவனிடத்தில் யார் மன்றுடுவார்கள்? ஒருவரு மன்றுடமாட்டார்கள். கல்குகளுக்கு முன்னிலுள்ளதையும். அவர்களுக்குப் பின்னிலுள்ளதையும் மவனறிவான். இன்னும் அவனறியப்பட்டவைகளில் நின்றும் ஒரு வஸ்துவைக்கொண்டும் அவனறிவித்துக் கொடுக்க நாடினுலன்றி யந்த வொன்றைக்கொண்டே யொழிய. அவர்கள் சூழ்ந்தறிய மாட்டார்கள். அவனுடைய குர்சி வானங்களுக்கும், பூமிக்கும் விஸ்தீரணமாகிவிட்டது. இன்னும் வானங்களையும், பூமியையும் பேணிக்காக்கிறது அவனுக்குக் கனமாகமாட்டாது. அவனுகிறவன் உயர்த்தி யானவனுகவும், வலுப்பமானவனுகவு மிருக்கும்.

172844

---

## சூறத்துப் பகருவின் கடைசி ஆயத்துகள் 2.

### இதன் மஃனுக்கள்.

(1) முஹம்மது நபியவர்களும், இன்னும் முஃமினுனவர்களும் அவர்களுடைய நாயனில் நின்றும் இறக்கப்பட்ட குறுஆனைக்கொண்டு ஈமான் கொண்டார்கள். அவர்க ளடங்கலும் அல்லாஹுத்த ஆலாவைக்கொண்டும், அவனுடைய மலாயிக்கத்துகளைக் கொண்டும், அவனுடைய வேதங்களைக்கொண்டும், அவனுடைய றசூல்மார்களைக்கொண்டும் ஈமான் கொண்டார்கள். அவர்கள் சொல்கிறுர்கள் அவனுடைய றசூல்மார்களில் நின்றும் ஒருவருக் கிடையிலும் நாங்கள் பிரிக்கமாட்டோம். (அதாவது யஹூதி நஸாறுக்கள் செய்வதுபோல் ஒருவரைக்கொண்டு ஈமானும், ஒருவரைக்கொண்டு குபிருமாக இருக்கமாட்டோம்.) இன்னும், அல்லாஹுத்த ஆலா எவினுனே அதை யொப்புக்கொண்டோம். இன்னு மவனுக்கு வழிப்பட்டோம். எங்களாண்டவனே உன்னுடைய பொறுக்குதலை நாங்கள் கேட்கிறோம். இன்னும் எங்களுடைய மீட்சி யுன்னளவிலாயிருக்குமென்றுஞ் சொன்னுர்கள்.

(2) அல்லாஹுத் தஆலா வொரு நபுசையாவது அது செய்ய ஏலுமே யதைத்தவிர வருத்தப்படுத்த மாட்டான். அது செய்த நன்மை யதற்காயிருக்கும். இன்னும் அது செய்த தீமை யதன்பேரிலா யிருக்கும். எங்களாண்டவனே! நாங்கள் மறதி யாக அல்லது தவறுதலாகச் செய்தோமேயானால் எங்களை நீ குற்றம் பிடியாதே. எங்களாண்டவனே! இன்னும் எங்களுக்கு முன்னுண்டானவர்களின் பேரில் சுமத்தாட்டிவைத்தாயே அது போல் எங்களின் பேரில் கனமான காரியத்தைச் சுமத்தாட்டா தே. எங்களாண்டவனே! இன்னும் எதைக்கொண்டு நாங்கள் திராணிபெறமாட்டோமோ அதை யெங்களுக்குச் சுமத்தாட் டாதே. இன்னும் நீ யெங்கள் பாவத்தை யழித்துவிடு. இன்னும் எங்கள் பாவங்களைப் பொறுத்தருள். இன்னும் எங்களுக்குக் கிருபை செய்தருள். நீயாகிறவன் எங்களுக் குதவிசெய்கிறவனு யிருக்கும். ஆனதால் காபிறுன கவ்முகளின்பேரில் பாதகமாக எங்களுக் குதவிசெய்தருள்வாயாக.

பிஸ்மில்லாஹி.

# யாஸீன் பெரிய துஆவும்

## அதன் மஃனவும்.

(துஆ)

ஸதகல்லாஹு ஸதகல்லாஹுல் அலிய்யுல் அளீம். வஸதக றசூலுஹு ஹுன்னபிய்யுல்கரீம். வநஹ்னு அலாதாலிக்க மினஷ் ஷாஹிதீன். வஷ்ஷாக்கிரீன்.

(இதன் பொருள்)

வஹுப்பமாகிய வுயர்த்தியாகிய அல்லாஹுத் தஆலா வுண்மை சொன்னன். அல்லாஹுத் தஆலா உண்மை சொன்னன் சங்கையாகிய அவனுடைய திருத்தூதர் நபிசல்லல்லாஹு அலை ஹிவசல்ல மவர்களு முண்மை சொன்னர்கள். நாங்கள் அதன் பேரில் சாட்சி சொன்னவர்களிலும் ஷுக்கூறுச் செய்தவர்களி லும் நின்றுமாயிருக்கிறோம்.

(துஆ)

வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். வல்ஆக்கிபத்து லில்முத்தகீன்.

(இதன் பொருள்)

எல்லாப் புகழும் ஆலத்தார்களைப் படைத்து வளர்த்து இர ட்சித்தாளுகிற அல்லாஹுத் தஆலாவுக்கா யிருக்கும், ஒடுக் கத்து நற்பேறுகிறது முத்தகீன்களுக்கா யிருக்கும்.

(துஆ)

வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலாறசூலிஹி ஸையிதின முஹம்மதின் காத்திமின்னபிய்யீன். வஸையிதில் முறுஸலீன். வஇமாமில் முத்தகீன். வஹபீபிறப்பில் ஆலமீன். வஅலா ஆலி ஹித்தையிபீனத் தாஹிரீன். வஅலா ஸஹாபத்திஹி அஜ்மஈன்.

(இதன் பொருள்)

ஸலவாத் தென்னும் கருணையும், சலாமென்னு மீடேற்றமு மாகிறது, அவனுடைய திருத்தூதரும், நம்முடைய நாயகமும், நபிகளுக்கு முத்திராங்கமும், முறுசலீன்களுக்கு செய்யிதும்,

முத்தகீன்களுக்கு இமாமும், ஆலத்தார்களைப் பரிபாலிப்பவனின் ஹபீபுமாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீதிலும், இன்னும் பரிசுத்தமாகிய மணமாகிய அவர்களின் ஆல் அவ்லாதுகள் மீதிலும், இன்னும் அவர்களுடைய அஸ்ஹாபுகளடங்கலின் மீதிலுமுண்டாவதாக.

(துஆ)

அல்லாஹும்ம மன்பஅனு வறுபஅனு வஹ்தினு பில்குற்ஆனில்அளீம். வபாரிக்லனு பில்ஆயாத்தி வத்திக்ரில் ஹக்கீம்.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வலுப்பமாகிய குறுஆனைக் கொண்டு நீ எங்களுக்குப்பிரயோஜனமும், உயர்த்தியும், நேர்வழியும் செய்தருள்வாயாக. இன்னும் நீ யெங்களுக்குப் பூராயமான திக்றைக் கொண்டும், ஆயத்துகளைக் கொண்டும் பறக்கத்துச் செய்தருள்வாயாக.

(துஆ)

வத்தகப்பல் மின்னைக் கிறுஅத்தனு வதுஆஅனு இன்னக்க அந்தஸ்ஸமீஉல் அலீம். வத்துப் அலைனு இன்னக்க அந்தத்தவ்வாபுர்றஹீம்

(இதன் பொருள்)

இன்னும் எங்களுடைய வோதுதல்களையும், எங்களுடைய துஆக்களையும் எங்களில்நின்றும் கபூல் செய்தருள்வாயாக. மெய்யாகவே நீயாகிறவன் அறிகிறவனாகவும், கேட்கிறவனாகவு மிருக்கிறாய். இன்னும் எங்கள் பேரிலுண்டான தவுபாவைக் கபூல் செய்தருள்வாயாக. மெய்யாகவே நீயாகிறவன் கிருபைசெய்கிறவனாகவும், தவ்பாவை மிகுதம் கபூல் செய்கிறவனாகவு மிருக்கிறாய்.

(துஆ)

வலாத்து ஆகிதனு பில்ஜுருயிமி யாக்கரீம். இஸ்த்த ஜிப் துஆஅனு யாஹலீம். இக்பிறுதுனூபனு குல்லஹா யாறஹீம். வலாத் தவுரிட்பிஹி உஜூஹனு யாயிலாஹல் ஆலமீன். வயாங்கைறன் னுவிரீன். ஆமீன்.

(இதன் பொருள்)

சங்கை யானவனே! குற்றங்களைக்கொண்டு எங்களைப் பிடியாமலிருப்பாயாக. அமர்த்தியானவனே! எங்களுடைய துஆ

வைக் கபூல்ச் செய்தருள்வாயாக. கிருபையானவனே! எங்களுடைய பாவங்களடங்கலையும் பொறுத்தருள்வாயாக. உதவிசெய்கிறவர்களில் கைருனவனே! ஆலத்தார்களுக்கு நாயனுனவனே! எங்கள் குற்றங்களைக் கொண்டு எங்கள் முகங்களில் அடியாமலிருப்பாயாக. ஆமீன்.

(துஆ)

இஜ்அலில்லா ஹும்ம தவாப கிருஅத்தினு ஹாதிஹி பிபறக்கத்தி துஆஇனு, லிமன் அஹ்லற்த்தனு, பிஸபபிஹி * வத்தலவ்னல் குற்ஆனல் அலீம் மின்அஜ்லிஹி.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எங்களுடைய இந்த ஓதல்களின் தவாபை எங்களின் துஆவின் பறக்கத்தைக்கொண்டு ஒருவருக்கு எந்த வொருவரென்றால் அவருடைய சபபைக்கொண்டு எங்களை நீ ஹாலிருக்கிவைத்து, அவருடைய தவணைக்காகவேண்டி வனுப்பமான குறு ஆனை நாங்கள் ஓதினேமே அந்த வொருவருக்கு நீ யாக்கிவைப்பாக.

(துஆ)

இற்ஹமில்லாஹும்ம பில்குற் ஆனில் அளீம். மதுவாஹு. வபுல்ல பிவாபிலிர் றஹ்மத்தி தருஹு. வக்பிறு ஸல்லத்தஹு. வஆனிஸ் வஹ்ஷத்தஹு. வஆமின் றவ்அத்தஹு. வநப்பிஸ்க் குறுபத்தஹு. வநவ்விற்மஹல்லத்தஹு வலக்கின்ஹு[illegible]த்ஹு. வதப்பித்துகராமித்தஹு. வகுல்லஹுவலிய்யன் கபிய்யா.

* ஹு—ஹி—யென்று வருகிற எல்லா விடங்களிலும், ஆண் ஒருவனு யிருந்தால் அவ்விதமாகவும், ஆண் பலராயிருந்தால் ஹு-வுக்குப்பதிலாக "ஹும்" என்றும்ஹீ-யிக்கு பதிலாக "ஹிம்" மென்றும், பெண் வொருத்தியாயிருந்தால்-ஹு-வென்பதற்கும், ஹி-யென்பதற்கும் பதிலாக "ஹா" வென்றும், பெண்பலராயிருந்தால் ஹு-வுக்கு பதிலாக "ஹுன்ன" வென்றும், ஹீ-யிக்கு பதிலாக "ஹின்ன" வென்றும் ஓதவேண்டியது.

இதுபோலவே அதன் தறுஜுமாவில் அவரென்று வருகிற இடங்களில் ஆண் ஒருவராயிருந்தால் அவரென்றும், பெண் ஒருத்தியாயிருந்தால் அவளென்றும், ஆண் பெண் பலராயிருந்தால் அவர்களென்றும் ஓதவேண்டியது.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வஹுப்பமாகிய குறு ஆணைக் கொண்டு அவரோதுங்குந்தானத்தைக் கிருபைசெய்வாயாக. இன்னும் அவருடைய பூமியை றஹ்மத்துடைய மழையைக்கொண்டு நனைப்பாயாக. இன்னுமவருடைய தவறுதலை மன்னிப்பாயாக. இன்னும் அவருடைய வெருட்சியை மருவுதலாக்கி வைப்பாயாக. இன்னுமவருடைய திடுக்கத்தை யச்சந்தீர்த்து வைப்பாயாக. இன்னுமவருடைய வருத்தத்தை யிலேசாக்கி வைப்பாயாக. இன்னுமவருடைய ஸ்தானத்தைப் பிரகாசமாக்கி வைப்பாயாக. இன்னு மவருக்கு அத்தாட்சியைப் படித்துக் கொடுப்பாயாக. இன்னுமவருக்குச் சங்கையைத் தரிபடுத்தி வைப்பாயாக. இன்னுமவருக்கு நீ காரியஸ்தனாகவும், அவரைக்கொண்டு கிருபை செய்கிறவனாகவு மாயிருந்துக்கொள்வாயாக.

(துஆ)

அல்லாஹும்ம வத்த லக்கஹு மின்க பிர்றவ்ஹி வர்றைஹான். வல்அம்னி வல்அமான். மலமக்பிறத்திவர்ரிலுவான். வஅஸ்லிபுஹு பில்ஜினான். வஹர்ரிம்ஹு அலன்னீறான். பிறஹ்மத்திக் கயாஹன்னானு யாமன்னான்.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சவுக்கியத்தையும், வாசத்தையும், அச்சந்தீர்தலையும், கார்மானத்தையும், மன்னிக்கு தலையும், பொருந்திக் கொள்ளுதலையும், உன்னில் நின்று மவருக்குக் காட்சி கொடுத்தருள்வாயாக. ஓ கிருபைசெய்கிறவனே! ஓ உபகாரஞ் செய்கிறவனே! உன்னுடைய றஹ்மத்தைக் கொண்டு அவரை நரகத்துடைய நெருப்பின் மேபரில் ஹறாமாக்கிச் சுவர்க்கத்திற் சேர்த்து வைப்பாயாக.

(துஆ)

அல்லாஹும் மக்பிற்ஹு வலிஅஹ்லில்குபூரி மினல் முஸ்லிமீன வல்முஸ்லிமாத். வல்முஃமினீன வல்முஃமினாத்.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! அவருக்கும், இன்னும் கபுறுகளிலுள்ள முஃமின், முஸ்லிம் ஆண் பெண்கள் அனைவருக்கும் பிழை பொறுத்தருள்வாயாக.

(துஆ)

அய்ன மாக்கானூ பத்குலில்லாஹும்ம அலைஹிம் பீக்குபூரிஹி மில்லியாஅ வன்னூற், வல்புஸ்ஹத்த வஸ்ஸுறூற், வல்வஹ்ஜத்தவல்ஹுபூற், வல்வில்தான வல்ஹூற், இலாயவ்மில்ஹஷ்ரி வன்னுஷூற், இன்னக்க மலிக்குன் றப்புன் அபுவ்வுன் கபூற்.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! அவர்களெங்கேயா யிருந்தாலுஞ்சரியவர்களுடைய கபுறுகளின் பேரில் ஒளிவையும், பிரகாசத்தையும், விஸ்தீரணத்தையும், சந்தோஷத்தையும், பள்பளப்பையும், சுவர்க்கத்தின் பிள்ளையையும், ஹூர்லீன்களையும், பாத்துகிற எழுப்புகிற நாள்வரையிலும் புகுதவைத்தருள்வாயாக. மெய்யாகவே நீயாகிறவன் இராஜனாகவும், பரிபாலிப்பவனாகவும், மன்னிப்பவனாகவும், பொறுப்பவனாகவு மாயிருக்கிறாய்.

(துஆ)

அல்லாஹும்ம இன்னா நஹ்னு அபீதுக்கல் லுஅபாவு, வல்புகறாவு வல்மஸாக்கீன்.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! மெய்யாகவே நாங்களாகிறது உன்னுடைய சிற்றடியார்களாகவும், பலஹீனர்களாகவும், பகீறுகளாகவும், மிஸ்கீன்களாகவு மிருக்கிறோம்.

(துஆ)

இதாவிற்னா இலாமாஸாறூ இலைஹி, பபாரிக், அல்லாஹும்மலனா வலஹும் பீமா நஸீறு இலைஹி.

(இதன் பொருள்)

அவர்கள் ஆயிட்டார்களே (அதாவது மவ்த்தாய்ப் போனார்களே) அந்தவொன்றளவில் நாங்களுமாயிடுவோ மேயானால் அந்நேரத்தில் எனதாண்டவனே! யெங்களுக்கும், நாங்கள் ஆவோமேயந்தவொன்றளவி லவர்களுக்கும் பறக்கத்துச் செய்வாயாக.

(துஆ)

இஜ்அல் மலக்கல் மவ்த்திஇன்தன்திஹாஇ ஆஜாலினா பிகபுலி அறுவாஹினா ஷபீக்கன் றபீக்கன் றஊபன் றஹீமா.

(இதன் பொருள்)

எங்களுடைய தவணையின் முடிவிடத்தில் எங்களுயிர்களைக் கைப்பற்றுகிறது கொண்டு மலக்கல் மவ்த்து அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களை கிருபையானவராகவும், நேசமானவராகவும், மன்னிக்கிறவராகவும், இரக்கமுடையவராகவு மாக்கி வைப்பாயாக.

(துஆ)

வஹ்ஷுற்னா வஇய்யாஹும் மஅல்லதீன அன்அம்த அலைஹிம் மினன்னபிய்யீன வஸித்தீக்கீன வஷ்ஷுஹதாஇ வஸ்ஸாலிஹீன்.

(இதன் பொருள்)

எங்களையும், அவர்களையும் நபிமார்கள், சித்தீக்கீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களிவர்களில் நின்றும் நீ யவர்களின் பேரில் நிஅமத்தென்னு மநுக்கிரகஞ் செய்தாயே யப்படிக்கொத்தவர்களுடனே யெழுப்பிவைப்பாயாக.

(துஆ)

வஹஸுன ஊலாஇக்கறபீக்கன் தாலிக்கல் பலுலுமினல்லாஹி வக்கபாபில்லாஹி அலீமா.

(இதன் பொருள்)

அவர்கள் கூட்டாளியாலழகானவர்கள். அந்த வரிசையாகிறது அல்லாஹுத்த ஆலாவில் நின்றுமாயிருக்கும். அறிவாளனல் அல்லாஹுத்த ஆலா போதுமானவன்.

(துஆ)

தஅவாஹும் பீஹா ஸுபுஹானக்கல்லாஹும்ம வத்தஹிய்யத்தஹும் பீஹாசலாம் வஆகிறு தஅவாஹும் அனில்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

(இதன் பொருள்)

சுவர்க்கத்திலே யவர்களுடைய அழைப்பானது ஆண்டவனே! உன்னை நாங்கள் துய்தாக்கிறோ மென்பதா யிருக்கும். இன்னு மவ்விடத்தில் அவர்களுடைய காணிக்கையானது சலாமுன் அலைக்குமென்று சொல்வதாயிருக்கும். இன்னுமவர்களுடைய கடைசி யழைப்பானது, எல்லாப்புகழும் ஆலத்தார்களைப் பரிபாலிப்பவனாகிய அல்லாஹுத்த ஆலாவுக்காயிருக்கு மென்பதா யிருக்குமென்பதே.

## பாத்திஹா வோதவேண்டிய ஒழுங்குகள்.

மேலே ஓதினதிலுள்ள தவாபுகளை யாரை நாடி யோதப் பட்டதோ அவர்கள் பேரில் அதாவது அந்த தவாபுகளை யின்னாருடைய றாஹின் பேரில் ஹதியாச் செய்தேனென்று சொல்ல வேண்டியது. ஆனால் பெரியோர்களாயிருந்தால் சங்கையாகிய இன்னாருடைய றாஹளவில் ஹதியாச்செய்தேனென்று சொல்ல வேண்டியது. இன்னும் நபிநாயகத்தின்பேரிலாயிருந்தால் சங்கையாகிய அவர்களுடைய றாஹின் ஹலறத்தள்ஷில் ஹதியாச் செய்தேனென்று சொல்லவேண்டியது. இவ்விதம் சொன்னவுடன் "பாத்திஹா" வென்று சொல்லி, அல்ஹம்துசூறாவை யொருவிடுத்தமும், குல்ஹுவல்லாஹு சூறாவை மூன்றுவிடுத்தமும், குல்அஊது பிறப்பில் பலகும், குல்அஊது பிறப்பின்னாஸும் ஒவ்வொரு விடுத்தமும் ஓதி அடியில்கண்ட யாஸீன் சின்னதுஆவை யோதி முடிக்கவேண்டியது.

பிஸ்மில்லாஹி.

## யாஸீன் சின்ன துஆவும்.

### அதன் மஃனாவும்.

---

(துஆ)

அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலி ஸையிதினா முஹம்மதின்.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எங்கள் நாயகம் முஹம்மது நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள். மீதிலும், அவர்கள் ஆல் அவ்லாதுகள் மீதிலும் சலவாத் தென்னும் கருணைமாரியைச் சொரிந்தருள்வாயாக.

(துஆ)

அல்லாஹும்ம அவ்ஸில் தவாப மாக்கருஅனாஹு மின் கலாமிக்கல் அஸீஸ். ஹாதிஹி ஹதிய்யத்தன் வாஸிலத்தன்

வறஹ்மத்தன் நாஸிலத்தன் வபறக்கத்தன் ஷாமிலத்தன் வத்துஹ்பத்தன் காமிலத்தன்மின்க இலா றாஹி ஸையிதினு வநபிய்யினு முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம காஸ்ஸத்தன். தும்மஇலா அற்வாஹி ஜமீயில் முஸ்லிமீன ஆம்மத்தன். தும்ம இலா றாஹி மன்தலவ்னல்குர்ஆனல் அலீம லிஅஜ்லிஹி வக்பிற்லஹு வற்ஹம்ஹு.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! மகிமையாகியவுன்னுடைய திருவசனமான குறுஆனில் நின்றும் இப்போது நாங்களோதினேமே யந்தவொன்றுடைய தவாபை அதுவோ வுன்னில் நின்றும் சேர்ந்த ஹதியாவாகவும், இறங்கிய றஹ்மத்தாகவும், சேகரமான பறக்கத்தாகவும், நிறப்பமான காணிக்கையாகவுமிருக்கிற ஹாலில் எங்களுடைய நபிய்யும், நாயகருமாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் றாஹின். ஹலறத்தளவிற் சொந்தமாகவும் பின்பு மற்றுமுள்ள முசுலிம்க ளடங்கலின் றாஹுகளளவிற்பொதுவாகவும், இன்னும் யாருடைய தவணைக்காக வேண்டி வலுப்பமாகிய குறு ஆனை யோதினேமோ அவனுடைய றாஹினளவிலும் நீ சேர்த்துவைத்தருள்வாயாக. இன்னுமவனுக்குப் பிழை பொறுத்துக் கிருபை செய்வாயாக.

(துஆ)

வஆனஸல்லாஹு வஹ்ஷத்தஹு. வறஹிமல்லாஹு குறுபத்தஹு. வனவ்வறல்லாஹு லரீஹஹு. வத்தகப்பலல்லாஹு மின்ஹஸ னத்திஹி. வத்தஜாவ ஸல்லாஹு அன் ஸையி ஆத்திஹி வகபறல்லாஹு துனூபஹு. வஜம அல்லாஹு பைனனு வபைனஹு பீஜன்னத் தின்னஈம்.

(இதன் பொருள்)

அல்லாஹுத்தஆலா அவனுக்கு வெருட்சியைமருவுதலாக்கி வைப்பானாக. இன்னு மவனுக்குப் பரதேசித்தனத்தைக் கிருபை செய்வானாக. இன்னு மவனுக்குக் கபுறை வெளிச்சமாக்கி வைப்பானாக. இன்னுமவனில் நின்றுமுள்ள நன்மையை யொப்புக்கொள்வானாக. இன்னுமவனுடைய பாவங்களை விட்டுமவனைக் கடத்தாட்டி வைப்பானாக. இன்னுமவனுடைய பாவங்களைப் பொறுப்பானாக. இன்னும் நஈமென்னும் சுவர்க்கத்தில் அவனுக்கும், நமக்கு மிடையில் சேர்மான மாக்கிவைப்பானாக.

1728424

(துஆ)

அல்லாஹும் மஜ்அல் கபுறஹு றவ்லத்தன் மின்ரியாலில் ஜின்னானி வலாத்தஜ்அல் கபுறஹு ஹுபுறத்தன் மின்ஹுபரின் னீறானி.

1728424

(இதன் பொருள்)

ஆண்டவனே! அவனுடைய கபுறை நரகத்தின் குழியில் நின்றும் ஒரு குழியாகவாக்கி வையாதே. அவனுடைய கபுறைச் சுவர்க்கத்தின் பூங்காவனத்தில் நின்றும் ஒரு பூங்காவனமாக்கி வைத்தருள்வாயாக.

(துஆ)

வஸல்லல்லாஹு வஸல்லம அலாகைரி கல்கிஹி ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

(இதன் பொருள்)

படைப்புகளில் கைறானவர்களும், எங்கள் நாயகமுமாகிய முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மீதிலும், அவர்களுடைய ஆல் அஸ்ஹாபு அடங்கல் மீதிலும் அல்லாஹுத்தஆலா ஸலவாத்தும், சலாமும் சொல்வானாக.

(துஆ)

ஸுபுஹான றப்பிக்க றப்பில் இஸ்ஸத்தி அம்மா யஸிபூன்.

(இதன்பொருள்.)

சிறப்புடைய வும்முடைய நாயனே துய்தாக்கும். அவன் அவர்கள் செய்கிற வருணிப்பை விட்டுந் துய்தானவன்.

(துஆ)

வஸலாமுன் அலல் முறுஸலீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன்.

(இதன் பொருள்.)

ஈடேற்றமாகிறது முறுசலீன்களான நபிமார்கள் பேரிலாயிருக்கும். இன்னும் எல்லாப்புகழும் ஆலத்தார்களைப் பரிபாலிப்பவனாகிய அல்லாஹுத்த ஆலாவுக்காயிருக்கும்.

வஜீபனம் உண்டபின்

## வோதுகிற துஆ.

அல்லாஹும்ம பாரிக்லனா, பீத்தஆமினா, வஷறாபினா, வலைபஇனா, வமுஆமலாத்தினா, வஹிறுபத்தினா, வத்திஜாறத்தினா.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எங்களுடைய ஊண். தீன், குடிப்புகளிலும், எங்களுடைய வியாபாரங்களிலும், எங்களுடைய சரக்குகளிலும், எங்களுடைய வாங்கல் கொடுக்கல்களிலும் எங்களுக்குப் பறக்கத்துச் செய்தருள்வாயாக.

(துஆ)

அல்லாஹும்ம பாரிக்லனா பீமா றஸக்த்தனா வகினாஅதா பன்னாற்.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீ யெங்களுக்குத் தந்தாயே அந்த ஒன்றில் எங்களுக்கு நீ பெருப்பமாக்கி வைத்து, அதாபை விட்டும் எங்களைக் காத்துக்கொள்வாயாக.

(துஆ)

அல்லாஹும் மஜ்அல்ஹு அவ்னன் அலாத்தாஅத்திக்க வலாத் தஜ்அல்ஹு அவ்னன் அலாமஅஸியத்திக்க.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! நீயெங்களுக்குக் கொடுத்த இரணங்களை உனக்கு மாறு செய்வதின் பேரிலுதவியாக்கி வையாதே. இன்னும் அதை உன்னுடைய வழிப்பாட்டின் பேரிலுதவியாக்கி வைத்தருள்வாயாக.

(துஆ)

வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்,

(இதன் பொருள்.)

எல்லாப்புகழும் ஆலத்தார்களைப் பரிபாலிப்பவனாகிய அல்லாஹுத் தஆலாவுக்காயிருக்கும்.

யாஸீன் சூராவின் தர்ஜுமா முற்றிற்று.